உ

சிவமயம்




# பிரார்த்தனைப் பாமாலை

## வித்தகம் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"




# சத்குரு வித்தகம் ஐயா

சோபகிருது வருஷம் மார்கழி திங்கள்
தாபத் தேபிறை உத்தராடம் நீசிதனில்
லோகக் கூத்தன் திருப்பாதம் சேர்ந்திட்ட
பார்புகழ் வித்தகன் பரமசிவன் கழல்கள் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்ப காலத்தில் சைவநெறி பிறழ்வுகளுக்கு எதிராக குரல் கொடுக்க சைவ நடனங்களை அரங்கிசைத்த போது....



அறநெறிப் பாடசாலைகளில் நடைபெற்ற (ஏடு தொடக்க) வித்தியா ஆரம்ப நிகழ்வின் போது குருநாதர்



வித்தகம் சிறுசர் ஆதரவு இல்லத்து சிறார்களுடன் குருநாதர்




திருவாசக முற்றோதலினை ஆரம்பித்து, திருவாசகம் ஓதுபவர்களை கௌரவிக்கும் போது குருநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பதாவது ஜெயந்தி தின விழா வைபவத்தின் போது...









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிதம்பரம் நடராஜ பெருமான் சன்னிதியில் நடைபெறும் ருத்ர யாகத்தின் போது குருநாதர்



குருநாதர் சிதம்பரம் தீட்சிதர்களுக்கு தட்சணை வழங்கும் போது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருநாதர் சிதம்பரம் தீட்சிதர்கள் ஆசிர்வாதத்தின் பின்னர்



சிதம்பரம் தில்லை நடராஜ பெருமான் தீட்சிதர்களுடன் குருநாதர்





சமாதிநிலை
அபிஷேகத்தின் போது குருநாதர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பிரார்த்தனைப் பாமாலை



வித்தகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T.V. ஐயப்பமூர்த்தி தீக்ஷிதர்
S/o.T. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் (எ)
சக்கரை ஐயா
164/69, கீழரத வீதி, சிதம்பரம் - 608 001.
தமிழ்நாடு, தென்இந்தியா.
போன் : 04144 - 224753
செல் : 93671 49053, 80157 12127

T.V. IYYAPPAMOORTHY DEEKSHITHAR
S/o. T. Venkatesswara Deekshithar (Alias)
Sakkarai Ayya
164/65, East Car Street, Chidambaram - 608 001.
Tamil Nadu, South India.
Ph : 04144 - 224753
Cell : 93671 49053, 80157 12127



எல்லாம் வல்ல ஸ்ரீசிவகாமசுந்தரி சமேத சபேஸ்வரர் ஆசீர்வாதத்தில் வித்தகம் ஐயா உடைய எல்லா அண்பர்களும் எல்லாம் வல்ல இறைவன் அருளில் எல்லா நலனும் பெற்று சௌபாக்கியமாக இருக்க பிரார்த்திக்கின்றேன்.

வித்தகம் ஐயாவிற்கு எப்பொழுதும் அம்பலவானருடைய பிரார்த்தனை தாள். எதற்கும் அப்பன் காப்பாற்றுவார் அப்பன் காப்பாற்றுவார் என்று தான் சொல்லுவார். ஆனி, மார்கழி இரு உற்சவத்திற்கும் எட்டாம் திருநாள் அன்று ருத்ர அபிஷேகம், அன்னபாவாடை செய்து தில்லைவாழ் அந்தணர்கள் எல்லோருடைய ஆசியும் பெற்றவர். எங்கள் இல்லத்தில் ஒருவராக வாழ்ந்து வந்தார். அவரைக் கண்டாலே ஆனந்தம். நிறைய தர்ம காரியங்கள் சிதம்பரத்தில் செய்து உள்ளார். அவருடைய ஆத்மா எல்லாம் வல்ல சித்தபேஸ்வருடைய பாதத்தில் சங்கமமாக பிரர்த்திக்கின்றேன்.

இலங்கையில் இருக்கும் போதும் இருந்தே இந்த ருத்ராபிஷேகம் வழக்கம் போல் எட்டாம் திருநாள் தானே என்று கேட்பார். சிதம்பரத்திற்கு வந்தவுடன் அய்யாவுடைய நிலத்தில் விளைந்த கைக்குத்தல் அரிசி அமுது நெய்வேத்தியம் நிறைய நிறைய சமைத்து செய்து நடராஜ பக்தர்களுக்கு வழங்க செய்வார். அதை பார்த்து ஆனந்த படுவார். அவருடைய முதலட் வணக்கமே இங்கே நெய்வேத்தியம் செய்து வழங்குவது தான். சிதம்பரத்தில் உள்ளவர்கள் வித்தகம் ஐயா செய்யும் ஓமம் எப்பொழுது ஹோமம் எப்பொழுது அப்படி என்று கேட்பார்கள். சாதாரணமாக ஒரு ருத்ர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோமத்திற்கு உள்ள சாமான்கள் போல் இல்லாமல் மஹாருத்ரருக்கு செய்தால் எவ்வளவு ஹோம ஷாமான்கள் இருக்குமோ அந்த அளவு ஹோமோ சாமான்கள் வைக்க சொல்வார்கள். அந்த ஜபம் செய்யும் ஐயாக்களுடைய இல்லத்திற்கே சென்று அன்றைய சாப்பாட்டிற்கான பொருட்களை அவர்களுக்கு வழங்கி விட்டு அவர்கள் இல்லத்திலும் ஆசி பெற்று அது போல தான் இந்த ருத்ர ஹோமத்தை செய்வார்கள். இந்த ஐயாவுடைய ருத்ர ஹோமம் அப்படின்னாலே முன்பே அனைவருக்கும் தெரியும். நேரில் பார்க்கும் தீக்/தர்கள் வித்தகம் ஐயா உடைய ஹோமமா அப்படினு கேட்பாரட்கள். ஹோமத்தின் போது வருகிற ஜ/வாலையை பார்த்து சந்தோஷப்படுவார் ஹோமத்தின் பொழுது அனைத்து பொருட்களையும் அவரே பார்த்து பார்த்து வாங்கி வருவார். அனைத்து வகையான சமித்துகளையும் சேர்கச் சொல்வார். அதிக ஜவாலையாக இருந்தால் ஈரமான சமித்தும் ஜவாலை குறைவாக இருந்தால் அதற்கான உபயோகமான சமாத்தும் சேர்க்க சொல்வார் அவருக்கு அவ்வளவு ஒரு ஆனந்தம் சிதம்பரத்தில் அவர் வந்தாலே நிறைய நல்ல காரியங்கள் நடக்கும். இது தவிர சுவாமி அம்மாள் தேர் வீதி வலம் பொழுது பொது மக்கள் பக்தர்களுக்கு அன்னதானம் செய்வார். அந்த மக்கள் பிரசாதம் சாப்பிடுவதை பார்த்து சந்தோஷப்படுவார். இந்த ருத்ர ஹோமத்தில் எங்கள் இல்லத்தின் பெயரையும் அனைவர் பெயரையும் சங்கல்பம் செய்ய சொல்லி பிறகு எல்லோருடைய பெயரையும் செங்கல்பம் செய்யச் சொல்லுவார். அவர் எங்கள் இல்லத்தில் ஒருவர் போன்று தான் வாழ்ந்து வந்தார். அவர் நம்முடன் தான் இருக்கின்றார். ஒவ்வொரு பேச்சு முக்கிய சமயத்திலும் ஓம் ஓம் என்று தான் சொல்வார். வித்தகம் ஐயாவுடைய கட்டளைதாரராக அமைந்ததற்கு எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி தெரிவித்து கொள்கின்றேன். அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீரீ சிவகாமசுந்தரி சமேத சித்ஸபேசரை பிரார்த்திக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது வரை 15 ஆண்டுகளுக்கு மேலாக இரு உத்சவத்திற்கும் ருத்ரஹோமம், அன்னப்பாவாடை சிறப்பாக செய்துள்ளார். ஆரம்பத்தில் இலைப்போட்டு தீக்ஷிதர்களுக்கு சாப்பாடு போட்டுக் கொண்டு இருந்தார். பிறகு சுவாமி தன்னிடம் கூறியதா சொல்லி அன்னப்பாவாடையாக செய்ய ஆரம்பித்தார். இந்த அண்ணா பாவாடையில் என்ன சிறப்பு என்றால் தீக்/தர்கள் வீட்டில் உள்ள குழந்தைகள் பெரியவர்கள் வரை சாப்பாடு செல்லும் சுவாமியே அவரிடம் கூறியாதாக சொல்வார். ஒவ்வொரு உற்சவத்திற்கும் எங்கள் இல்லத்தில் அனைவருக்கும் வஸ்திரம் எடுத்துக் கொடுப்பார். பக்தர் பிரசாதம் சாப்பிட்டால் அதை பார்த்து ஆனந்தப் படுவார். இது போன்ற பக்தரை காண்பது அரிது.

கொரோணா நேரத்தில் மக்கள் கோயில் உள் வர சமயத்தில் கூட இந்த உற்சவத்தில் நடைபெறுகிற ஹோமங்களை பாவாடைகளையும் தொடர்ச்சியாக செய்ய வேண்டுமென்று கூறினார் அது படி செய்யப்பட்டது. என்றும் ஐயா நினைவில் பிரார்ததனையுடன் இருக்கும் ரி வெங்கடேஸ்வர தீட்சிதர் (சர்க்கரை ஐயா)

நன்றி

**தி.வெ.ஐயப்பமூர்த்தி தீட்சிதர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வார்த்தைகளற்று வணங்குகின்றேன்



ஐயா,
இந்தியா செல்கின்றார்
சிதம்பரம் நடராஜர் திருவிழா செல்கின்றார்
09.01.2024 மீள நாடு திரும்புவார்
இப்படித்தான் தகவல் கிடைத்தது
எண்ணற்ற நினைவுகளுடன்
வேண்டுதல்களுடன் வருகைக்காக
காத்திருந்தேன்..... கண்
காணமுடியாத தேசத்தில் நிற்கையில்
நடராஜரின் திருப்பாதம் சரணாகதியென
தெய்வீக ஒளி, ஒலித்துக் கொண்டது

ஏனோ....
எமக்கெல்லாம் அளவிட முடியாத அதிர்ச்சி தான்
வாசல் தேடி வருவோர்க் கெல்லாம்
வணக்கம் கூறி வரவேற்று
வந்தோரை வரவேற்கும் பண்பாட்டில்
வாயார வயிரார வகைப்படுத்தும் பண்பாளரே.....
பக்தி நிறை மார்க்கத்தில்
மனமெல்லாம் பரவசமளித்தீர்.....

அள்ள முடியாத அன்பையும்
அரவணைப்பு நிறைந்த வழியையும்
குறுகலற்ற சிந்தனையையும்
“வித்தகத்தின்” வித்துக்களாக
விதைத்தவரே! - தங்கள்
விதைகள் வீண்செல்லாது என்ற
நம்பிக்கையில் உமை தினம் வணங்குவோம்
நெஞ்சார மகிழ்வோம்!

குருவருள் பெற்றுக் குவலயம் வாழ்க

**உங்கள் அன்பின் “வீரகேசரி”**

**யாழ் தர்மினி பத்மநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பெரிய மாவடியின் அரியசித்தர்

சாவகச்சேரி பெரிய மாவடி விநாயகரின் பேரருள் பெற்றவர் "வித்தகம் சுவாமிகள்", இவர்களின் ஞான குரு பெரிய மாவடி ஆறுமுகம் சுவாமிகள். மகாஞானி ஆறுமுகன் யாழ்ப்பாண நல்லூர் யோகரின் சீடர்களில் சித்து மிக்கவர். பரமானந்தம் திருநாமமிக்க சீடர் அவர்கள் அன்பர்கள் சின்னத்தம்பி சுவாமி என்றும் கூறுவார். சோதிடம், சித்தமருத்துவம் முதலியவற்றுடன் தினம் எப்போதும் விநாயகர் பூசையை மிகச் சிறப்புடன் ஆற்றும் பெரியவர்.

நாடிச் செல்லும் பக்தர்களைப் பார்வை மூலம் ஞானக் கண் கொண்டு தெளியும் ஆற்றல். அவர்கள் கூறமுன் அவர்களின் உட்கிடைகளை கூறிடும் ஆற்றல் - பசிப்பினி ஆற்றிடும் உயர்பாங்கு என்றும் அவரிடம் உண்டு. தில்லைக்கூத்தனிடம் நாமிருவரும் அடிக்கடி திருவாதிரையில் சந்தித்து பல தெய்வீக விடயங்களை உரையாடுவோம். யாழ்ப்பாண பேரிடர் இடப்பெயர்வில் விநாயகப் பெருமான் உத்தரவில் 48 நாட்கள் 48 மணிநேர திருமுறைகளை பண்ணுடன் ஓத பெரும் பங்கு ஆற்றிய பெரும் தகையினர். ஞானகுரு கட்டளையே இது ஞானகுருவிடம் இவர் கண்கள் மாத்திரம் பேசும் அந்தளவில் அவரின் உள்ளம் இவர்கள் அறிந்திடுவர்.

உடனலமுற்றவர்களுக்கு உற்ற துணைவர் ஆகி தங்க வைத்து சிகிச்சை தரும் பெருந்தகை. அவரிடம் நிறைய சித்தி பெற்றவர் பலர் உண்டு. அவர்கள் அவர்களை நன்கு அறியும் மீண்டும் பிறவா பேரின்பம் தூக்கிய திருவடியுடன் அவர்கள் கலந்து அவர்கள் வழி விட்டார்கள். தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரை தலையில் தரும் உலக நன்மை சாந்தி நோய் பிணிநீக்கம் இயற்றி உலக நன்மை அடைய பணி செய்ய விநாயக பெருமானை இறைஞ்சுகின்றோம்.

சுபம்

தக்கார் தகவிலார் என்பது அவர்தம் எச்சத்தால் வைக்கப்பெறும்

சாந்தி சாந்தி சாந்தி

**குருவருள் டாக்டர் மு.நவரத்தினம்**

**மேனாள் தலைவர் நுண்கலைபீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,**

**இலங்கை.**

**21.01.2024**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் குருநாதன்

கொடுமா நகரத்து அழுந்தாமல் எம்மைக் காத்து ஆட்கொள்ளும் குருமணியின் பாதாரவிந்தங்களைப் பணிந்து நிற்கும் உங்கள் அடியவனின் மனங்களில் இருந்து சில சிந்தனைகள்.

மனித வாழ்க்கையின் எண்ணங்கள் தனித்தன்மை வாய்ந்தவை. மனித எண்ணங்களை, நற்சிந்தனைகள் மேன்மைப்படுத்துகின்றன. அவனின் நல்லெண்ணங்கள் நற்செயல்கள் (திரிகரணசுத்திகள்) உயர்ந்ததாக அமையவேண்டும். உணர்ந்து வாழ்தலே மனிதப் பிறவியின் நற்பயன் ஆகும். "மனம் போல் வாழ்வு" என்ற மொழியும் அதுவே ஆகும்.

மனிதன் நல்ல நிலையில் வாழும் போது இறைவனை நினைப்பதில்லை. துன்பம் வருகின்ற போது தான் இறைவனை நினைக்கின்றான். அவன் தன் தவறுகளை உணர்ந்து இறைவன் திருவடிகளில் சரண் அடைகின்றான். அவன் மீது நம்பிக்கை வைக்கின்றான். தேவார, திருவாசக, திருமந்திரங்களை படிக்கின்றான். "பஜனை செய்யாய் மனமே" என்றால் பஜனைப் பாடல்களைப் படிக்கின்றான், கேட்கின்றான். இதுவே எனது குரு குருமணி வித்தகம் செம்மல் எமக்கு அடிக்கடி எடுத்துரைத்தார்.

இரவு 12.30 மணிக்கு கைகாட்டும் போது எம்மைப் பிரிந்து இறைவனடி சேர்வீர்கள் என ஒரு துளி கூட எண்ணிப்பார்க்கவில்லை. செய்தி கேட்டு ஆற்றொணாத் துயரில் பாய்மரம் இல்லா கட்டு மரம் போல் ஆனேன் நிலை தடுமாறினான். என் செய்வது முடி சார் மன்னரும் ஒரு நாள் பிடி சாம்பலாவது நியதியே என எண்ணி மனதை தேத்திக் கொண்டேன். தாங்கள் விட்ட பணி தொட்ட பணிகளைச் செய்ய எம்மோடு இருந்து வழிகாட்டுவீர்கள். இறை பணியே எமது எண்ணங்கள். "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" குருவருள் பெற்று குசலயம் வாழ்க.

**சு. துரைராஜசிங்கன் (பொலிஸ்ஜயா)**

**உப தலைவர் இத்தியடி வீரசக்தி விநாயகர் ஆலயம், சங்கத்தானை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம் உள்ளத்தில் இருந்து

பொன்னம்பலப் பெருமான் திருவடித்தாள் மறைகள் நீடுழி வாழ்க என்று அல்லும் பகலும் அனுதினமும் தில்லைக் கூத்தனைத் தன் சிந்தையில் வைத்து மற்றவர் அறியா அவ் உண்மையினை அறிந்து உணர்ந்து கொள்ளும் வண்ணம் இதற்க்கு சுமார் 50 வருடங்களிற்கு மேலாக கூட்டுப் பிரார்த்தனை ஆரம்பித்து இற்றை வரை தொடர்ந்து நடாத்தி அதன் சிறப்புக்களை மெய்ப்பித்து காட்டிய பெருந்தகை எம் குருநாதர் வித்தகம் சுவாமிகள்.

யுத்த காலத்தின் போது மக்கள் படும் இன்னல்களை துடைக்கும் பொருட்டு திருமுறை ஓதுவார்களைக் கொண்டு 48 நாட்கள் 45 மணி நேரம் இரவு பகலாக திருமுறை பதிகங்களை பண்ணுடன் பாடி மக்கள் துன்பம் துடைத்த புண்ணியவாளர் நித்திய பூசைகள் நடைபெறாத ஆலயங்கள் சிலவற்றில் பிரார்த்தனையின் மகத்துவத்தினை உணர்த்தும் முகமாக பிரார்த்தனை ஆரம்பித்தும் அவ் ஆலயங்களை மிளிரச் செய்தவர் குருநாதர். வித்தகம் ஆதரவு இல்லம், வித்தகம் அறநெறி பாடசாலை என்பவற்றை ஸ்தாபித்து சைவநெறியின் பால் ஈடுபாடு கொண்ட தலைமுறையை உருவாக்குவதற்கு அரும்பாடு பட்டவர். "பாடும் அடியார்கள் கேட்பார் மேல் பாவமன மறையுமே" என்ற தேவார அடியார்களுக்கு அமைவாக இறைவனை பாடிப் பாடி நம் பாவங்களைப் போக்க முடியும் என்ற கருத்தை தம் சிந்தையில் கொண்டு இப் பிரார்த்தனையை அதன் ஆரம்பித்து பலாபலனை அடைவதற்கு முன்னோடியாக திகழ்ந்தவர் குருநாதர்.

சாமகானப் பிரியனை, தேவாரம், திருவாசகம், பண்ணிசை பாடல்களை இசையுடன் பாடி அவர் தாழ் அடையலாம் என்று அசையாத நம்பிக்கை கொண்டு எமை எல்லாம் அதன் பால் ஈடுபட வைத்து அதன் உண்மைத்தன்மையை உணர்த்தி சென்ற எம் குருநாதரின் வழிகாட்டலில் நடைபெற்று வருகின்ற இக் கூட்டுப்பிரார்த்தனை பாடல்களை பாமாலையாக வெளியீடு செய்வதில் பெருமிதம் கொள்கிறோம். இதற்கு உறுதுணையாக இருந்த அன்புள்ளங்களுக்கும் அச்சேற்றிய சக்தி பதிப்பகத்தாருக்கும் எமது நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.

**வித்தகம்**

**திருநீலகண்ட அபிவிருத்திச் சபை, சாவகச்சேரி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிள்ளையார் வணக்கம்

ஓம் சிவ குரு கணபதமே நம துணை

பண் - பியந்தைக் கந்தாரம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகந்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

மூஷிக வாகன மோதக கஸ்த்தா
சாமர கர்ண விளம்பித சூத்ரா
வாமன ரூபா மகேஸ்வர புத்ரம்
விக்ன விநாயக பாதம் நமஸ்தே

கஜான நம்பூத கணாதி சேபிதம்
கபித்த சம்பு பலசார பட்சிதம்
உமாசுதம் சோக விநாச காரணம்
நவாமி விக்னேஸ்லர பாத பங்கயம்

ஓம் தர்புருஷாய வித்மகே
வக்குறு துண்டாய தீமகி
தந்தோ தந்திப் பிரசோதயாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவாரங்கள்

## திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை கண்டன்
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கும் மிகவே.

என்பொடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன் பொதி மத்தமாலை புனல் சூடிவந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன் றொடேழு பதினெட்டொறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

உருவளர் பவள மேனி ஒளிநீறணிந்து
உமையோடு வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் வர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபால் இருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடு நோய்கள் ஆன பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிற்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூத முவையும்
அஞ்சிடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியவர்க்கு மிகவே.

வாள்வரி அதளதாடைவரிகோ வணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடு நாகமொடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள் படவிழிசெய்தன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழ் இலங்கை அரயன் றனோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரன்நாரி பாகன்
பசு வேறும் எங்கள் பரமன்
சலமகளோடெருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர் மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய் வேட விகிர்தன்
மத்தமு மதியு நாகம் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அனால்
புத்தரோ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல்துன்னி
வளர் செம் பொன் எங்கள் திகழ
நான் முகன் ஆதியாய பிரமா புரத்து
மறை ஞான ஞானமுனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன் பெற்ற பதிகம்

பண் - காந்தாரபஞ்சமம்

இடரினும் தளரினும் எனதுறு நோய்
தொடரினும் உன்கழல் தொழுதெழுவேன்
கடலட தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடரினில் லடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமா றிவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே.

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினு முன்கழல் விதுவேனல் லேன்
தாழிளம் தடம்புனல் தயங்குசென்னி
போழிள மதிவைத்த புண்ணியனே
இதுவோ எமை ஆளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே.

நனவினும் கனவிலும் நம்பா வுன்னை
மனதிலும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறும்கொன்றை போதணிந்த
கனலெரி யனல்புல்கு கையவனே
இதுவோ எமை ஆளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே.

தும்மலே டருந்துயர் தோன்றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றா தென்நாக்
கைமல்கு வரிச்சிலைக் கணையொன்றினால்
மும்மதில் எரிஎழ முனிந்தவனே
இதுவோ எமை ஆளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையது விழினும் கழிவுறினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாய சென்னி
மையணி மிடறுடை மறைவனே
இதுவோ எமை ஆளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
இதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே

வெந்துயர் தோன்றினோர் வெருவுறினும்
எந்தாய் உன்னடியலால் ஏத்தாதென்நா
ஐந்தலை யரவுகொண் டரைக்கசைத்த
சந்தவெண் பொடியணி சங்கரனே
இதுவோ எமை ஆளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே

வெப்போடு விரவியோர் வினைவரினும்
அப்பாவுன் அடியலால் அரற்றாதென்நா
ஒப்புடை ஒருவனை உருவழிய
அப்படி அழலெழ விழித்தவனே
இதுவோ எமை ஆளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறை யரனே

பேரிடர் பெருகியோர் பிணிவரினும்
சீருடைக் கழல் அலால் சிந்தை செய்யேன்
ஏ ருடை மணிமுடி யிராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோ எமை ஆளுமா றீவதொன்றமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறையரனே

உண்ணிலும் பசிப்பினும் உறங்கினும் நின்
ஒண்மலர் ரடியலால் அரற்றாதென்நா
கண்ணனும் கடிகமழ் தாமரைமேல்
அண்ணலும் அளப்பரி தாயவனே
இதுவோ எமை ஆளுமா றிவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறையரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தொடு மயங்கியோர் பிணிவரினும்
அத்தாவுன் னடிலால் அரற்றாதென்நா
புத்தரும் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட் கருள்செய்து பயின்றவனே
இதுவோ எமை ஆளுமா றிவதொன்றெமக்கில்லையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடுதுறையரனே.

அலைபுனல் ஆவடுதுறை அமர்ந்த
இலைநுனை வேற்படை யெம் இறையை
நலமிகு ஞானசம்பந்தன் சொன்ன
விலையுடைஅருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயினநீங் கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் ஏறுவர் நிலமிசை நிலையிலரே.

திருச்சிற்றம்பலம்

## இடர் நீங்கிட வேண்டும்

திருச்சிற்றம்பலம்

**பண் - பழம் தக்கராகம்**

மறையுடையாய் தோலுடையாய் வார்சடைமேல் வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனேயென்றுனைப்பேசினல்லால்
குறையுடையார் குற்றமோராய் கொள்கையினாலுயர்ந்த
நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களமேயவனே.

கனைத்தெழுந்த வெண்திரைசூழ் கடலிடை நஞ்சுதனை
தினத்தனையா மிடற்றில் வைத்த திருந்தியேவநின்னை
மனத்தகத்தோர் பாடலாடல் பேணியிராப்பகலும்
நினைந்தெழுவார் இடர்களாய் நெடுங்கள மேயவனே

நின்னடியே வழிபடுவான் நிமலாசினைத் கருத
என்னடியான் உயிரைவவ்வேல் எள்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர்சுமக்கும்
நின்னடியார் இடர்களாய் நெடுங்கள மேயவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைபுரிந்த மன்னவன்றன் மகளையோர்பால்மகிழ்ந்தாய்
அலைபுரிந்த கங்கைதங்கும் அவிர்ச்சடை ஆரூரா
தலைபுரிந்த பலிமகிழ்வாய் தலைவனின்தாள் நிழற்கீழ்
நிலைபுரிந்தார் இடர்களாய் நெடுங்கள மேவியவனே.

பாங்கினல்லார் படிமஞ்செய்வார் பாரிடமும் பலிசேர்
தூங்கிநல்லார் பாடலொடு தொழுகழலே வணங்கித்
தாங்கிநில்லா அன்பினொடும் தலைவனின்தாள்நிழற்கீழ்
நீங்கிநில்லார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே

கூறுகொண்டாய் மூன்றுமொன்றாய்க கூட்டியோர் வெங்கணையால்
மாறுகொண்டார் புரமெரித்த மன்னவனே கொடிமேல்
ஏறுகொண்டாய் சாந்தமீதென் றெம்பெருமான் அணிந்த
நீறுகொண்டார் இடர்களாய் நெடுங்கள மேவியவனே.

குன்றினுச்சி மேல் விளங்கும் கொடிமதில்சூழ் இலங்கை
அன்றிநின்ற அரக்கர்கோனை அருவரைக்கீழ் அடர்த்தாய்
என்று நல்ல வாய்மொழியால் ஏத்திஇராப் பகலும்
நின்றுநைவார் இடர்களாய் நெடுங்கள மேவியவனே.

வேழவெண்கொம் பொசித்தமாலும் விளங்கிய நான்முகனும்
சூழ எங்கும் நேடவாங்கோர் சோதியுளா கிநின்றாய்
கேழல்வெண்கொம்பணிந்தபெம்மான் கேடிலாப்பொன்அடியின்
நீழல் வாழ்வார் இடர்களாய் நெடுங்கள மேவியவனே.

வெஞ்சொற்றஞ் சொல் வாக்கிநின்ற வேடமிலாச்சமணும்
தஞ்சகிலாச் சாக்கியரும் தத்துவமொன் றறியார்
துஞ்சலில்லா வாய்மொழியால் தோத்திரநின் அடியே
நெஞ்சில் வைப்பார் இடர்களையாய் நெடுங்களமே யவனே.

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தை
சேடர்வாழும் மாமறுகிற் சிரபுரக்கோன் நல்த்தால்
நாடவல்ல பனுவல்மாலை ஞானசம்பந்தன் சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லர் பாவம் பறையுமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீஸ்வரப் பதிகங்கள்

திருச்சிற்றம்பலம்

பண் - நட்டராகம்

விருது குன்றமா மேருவி னாணா
வாவனலெரி யம்பாய்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யெந்நாளும்
கருது கின்றவூர் கனைகடற் கடிகமழ்
பொழிலணி மாதோட்டம்
கருதநின்றகே தீச்சரங் கைத்தொழக்
கடுவினை யடையாவே.

பாடல் வீணையர் பலபல சரிதைய
ரெருதுகைத் தருநாட்டம்
ஆடல் பேணுவ ரமரர்கள் வேண்டநஞ்
சுண்டிருள் கண்ணத்தர்
ஈடமாவது இருங்கடற் கரையினி
லெழிறிகழ் மா தோட்டம்
கேடிலாத கேதீச்சரந் தொழுதெழக்
கெடுமிடர் வினைதானே.

பெண்ணொர் பாகத்தர் பிறைதவழ் சடையின
ரறைகழல் சிலம்பார்க்கச்
சுண்ணமாதரித் தாடுவார் பாடுவ
ரகந்தொறு மிடுபிச்சைக்கு
உண்ணல் ஆவதொடு இச்சையின் உழல்பவர்
உயர்தரு மாதோட்டத்து
அண்ணல் நண்ணகே தீச்சரம் அடைபவர்க்கு
அருவினை அடையாவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடிகொள் மேனியர் புலியதழ் அரையினர்
விரிதரு கரத்தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர் நூலினர்
மறிகடல் மாதோட்டத்து
அடிகள் ஆதரித் திருத்தகே தீச்சரம்
பரிந்து சிந்தையராகி
முடிகள் சாய்த்தடி பேணவல்லார்தம்மேல்
மொய்த் தெழும் வினைபோமே.

நல்லர் ஆற்றவும் ஞானநன் குடையர்தம்
மண்ந்தவர்க் கருளிய
வல்லர் பார்மிசை வான்பிறப் பிறப்பிலர்
மலிகடல் மாதோட்டத்து
எல்லையில் புகழ் எந்தைகே தீச்சரம்
இராப்பகல் நினைத்தேக்கி
அல்ல லாசறுத் தரனடி பிணைதொழும்
அன்பராம் அடியாரே.

பேழை வார்சடைப் பொருத்திரு மகடனைப்
பொருந்தவைத் தொருபானம்
மாழை யங்கையற் கண்ணிபால் அருளிய
பொருளினர் குடிவாழ்க்கை
வாழையம் பொழில் மந்திகள் களிப்புற
மருவிய மாதோட்டக்
கேழல் வெண்மருப் பணிந்தநீழ் மார்பர்க்கே
தீச்சரம் பிரியாரே

பண்டு நால்வருக் கறமுரைத் தருளியபல்
லுலகினில் உயிர்வாழ்க்கை
கண்ட நாதனார் கடலில் கைதொழக்
காதலித் துறைகோயில்
வண்டு பண்செயு மாமலர்ப் பொழில் மஞ்ஞை
நடமிடு மாதோட்டம்
தொண்டர் நாடொறும் துதிசெய அருள்செய்கே
தீச்சர மதுதானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென்னி லங்கையர் குலபதி மலைநலிந்
தெடுத்தவன் முடிதிண்டோள்
தன்ன ரங்கெட அடர்த்தவற் கருள் செய்த
தலைவனார் கடலட வாயப்
பொன்னி லங்கிய முத்துமா மணிகளும்
பொருந்திய மாதோட்டத்து
உன்னி னென்பொடும் அடியவர் இறைஞ்சுகே
தீச்சரத் துள்ளாரே.

பூவு ளானும்ப பொருகடல் வண்ணனும்
புவியிடந் தெழுந்தேடி
மேவி நாடிநின் னடியிணை காண்கிலா
வித்தக மென்னாகும்
மாவும் பூகமும் காதலியும் நெருங்குமா
தோட்டநன் நகர்மன்னித்
தேவி தன்னொடுந் திருந்துகே திச்சரத்
திருத்தவெம் பெருமானே.

புத்த ராச்சில புனைதுகி லுடையவர்
புறனுரைச் சமணாதர்
எத்த ராகி நின் றுணபவர் இயம்பிய
ஏழைமை கேளன்மின்
மத்த யானையை மறுகிட உரிசெய்து
போர்த்தவர் மாதோட்டத்து
அத்தர் மன்னுபா லாவியின் கரையிற்கே
தீச்சரம் அடைமின்னே.

மாடெ லாமண முரசெனக் கடலினது
ஒலிகவர் மாதோட்டத்து
ஆடலே றுடை யண்ணல் கேதீச்சரத்து
அடிகளை யணிகாழி
நாடு ளார்க்கிறை ஞானசம்பந்தன் சொல்
நவின்றெழு பாமாலைப்
பாடலாயின பாடுமின் பக்தர்கள்
பரகதி பெறலாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் :- நட்டராகம்

நத்தார்படை ஞானன்பசு வேறிந்தனை கவிழ்வாய்
மத்தம்மத யானையுரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

சுதுவார்பொடி நீறுந்நல துண்டப்பிறை கீளும்
கடமார்களி யானையுரி யணிந்தகறைக் கண்டன்
பாடவேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
திடமா உன கின்றான்திருக் கேதீச்சரன் தானே.

அங்கம் மொழி யன்னாரவர் அமரர் தொழுதேத்த
வங்கம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பங்கஞ்செய்த பிறைசூடினன் பாலாவியின் கரைமேல்
செங்கண்ணர வசைத்தான் திருக்கேதீச்சரத் தானே.

கரியகறைக் கண்டன்நல்ல கண்மேலொரு கண்ணான்
வரிய சிறை வண்டியாழ்செயும் மாதோட்டநன் னகரில்
பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்திருக்கேதீச்சரத் தானே.

அங்கத்துறு நோய்கள்ளடி யார்மேலொழித் தருளி
வங்கம்மலி கின்றகடல் மாதோட்டநன் னகரில்
பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்
தெங்கம்பொழில் சூழ்ந்திருக்கேதீச்சரத் தானே.

வெய்யவினை யாயவ்வடி யார்மேலொழித் தருளி
வையம்மலி கின்றகடல் மாதோட்ட நன்னகரில்
பையேரிடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடை முடியான்திருக் கேதீச்சரத் தானே.

ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி
வானத்துறு மலியுங்கடல் மாதோட்ட நன்னகரில்
பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்தெயி றணிந்தான்திருக் கேதீச்சரத்தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டன்னழ காகவ்வரை தன்மேலர வார்த்து
மட்டுவண்வண் டாலும் பொழில் மாதோட்ட நன்னகரில்
பட்டவரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்நமை யாள்வான் திருக்கேதீச்சரத்தானே.

மூவரென இருவரென முக்கண்னுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில்
பாவம் வினை யறுப்பார்பயல் பாலாவின் கரைமேல்
தேவனெனை யாள்வான் திருக்கேதீச்சரத்தானே.

கறையார் கடல் சூழ்ந்தகழி மாதோட்ட நன்னகரில்
சிறையார்பொழில் வண்டியாழ் செயுங் கேதீச்சரத்தானே
மறையார்புகழ் ஊரன்னடித் தொண்டன்னுரை செய்த
குறையார்தமிழ் பத்துஞ் சொலக் கூடாகொடு வினையே

திருச்சிற்றம்பலம்

பண்-: காந்தாரபஞ்சமம்

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைத்தொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுயையாவது நமச்சிவாயவே.

பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக் கருங்கலம் அரன்அஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே.

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகில்அவை யொன்று மில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடுக்கண்பட்ட டிருப்பினு மிரந்து யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவுவோ மல்லோம்
அடுக்கிற்கிழ் கிடக்கினு மருளி னாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சி வாயவே.

வெந்தநீ றருங்கலம் விரதி கட்கெலாம்
அந்தணர்க் கருங்கல மருமறை யாறங்கம்
திங்களுக் கருங்கலந் திகழு நீண்முடி
நங்களுக் கருங்கலம் நமச்சி வாயவே.

சலமிலன் சங்கரன் சார்ந்த வர்க்கலால்
நலமில னாடொறு நல்கு வானலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே.

வீடினா ருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினா ரந்நெறி கூடிச் சென்றாலும்
ஓடினேன் ஓடிச்சென் றுருவங் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சி வாயவே.

இல்லக விளக்கது இருள்கெ டுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

முன்னெறி யாகிய முதல்வன் முக்கண்ணன்
தன்னெறி யேசர ணாதல் திண்ணமே
அன்னெறி யேசென்றங் கடைந்த வர்க்கெல்லாம்
நன்னெறி யாவது நமச்சி வாயவே.

மாப்பிணை தழுவிய மாதோர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சி வாயப்பத்து
ஏத்தவல் லார் தமக் கிடுக்க ணில்லையே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண் :- காந்தாரபஞ்சமம்

துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்சவு தைத்தன் வஞ்செ ழுத்துமே.

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ள்நின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
அந்தியுன் மந்திர மஞ்செ ழுத்துமே.

ஊனிலு யிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞானவி ளக்கினை யேற்றி நன்புலத்
தேவனை ழிதிறத் தேத்து வார்க்கிடர்
ஆனகெ டுப்பன அஞ்செழுத்துமே.

நல்லவர் தியரெ னாது நச்சினர்
செல்லல்கெ டச்சிவ முத்தி காட்டுவ
கொல்லந மன்றனர் கொண்டுபோமிடத்து
அல்லல்கெ டுப்பன அஞ்செ ழுத்துமே.

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்(து)
அங்குள பூதமு அஞ்ச ஐம்பொழில்
தங்கர வின்பட மஞ்சுத் தம்முழை
அங்கையி லைவிர லஞ்செ ழுத்துமே.

தும்ம லிருமல் தொடர்ந்து போழ்தினும்
வெம்மை நரகம் விளைத்து போழ்தினும்
இம்மை விளையடர்ந் தெய்தும் போழ்தினும்
அம்மையி னுந்துணை அஞ்செ ழுத்துமே.

வீடுபி றப்பை அறுத்து மெச்சினர்
பீடைபெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடுகொ டுப்பன மன்று மாநடம்
ஆடிஉ கப்பன அஞ்செ ழுத்துமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டம ரோதி மடந்தை பேணின
பண்டை யிராவணன் பாடி உய்தன்
தொண்டர்ர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்அச ழுத்துமே.

கார்வண்ணன் நான்முகன் காணுதற் கொணாச்
சீர்வண்ணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வண்ணம் பேசிப் பிதற்றுத் பித்தர்கட்கு
ஆர்வண்ணம் ஆவன அஞ்செ ழுத்துமே.

புத்தர்ச மண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளித்து தேறின
வித்தக நீறணி வார் விணைப்பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செ ழுத்துமே

நற்றமிழ் ஞானசம் பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலையீ ரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்ப ராவரே.

திருச்சிற்றம்பலம்

பண்:- கௌசிகம்

காதலாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத னாம நமச்சி வாயவே.

நம்பு வாரவர் நாவி னவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது வொப்பது
செம்பொ னார்தில தம்முல குக்கெல்லாம்
நம்ப னாம நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெக்கு ளார்வ மிகப்பெரு கிந்திளைந்து
அக்க மாலைகொ டங்கையி லெண்ணு வார்
தக்க வானவ ராத்தகு விப்பது
நக்க னாமம் நமச்சி வாயவே.

இயமன் தூதரு மஞ்சுவ னின்சொலால்
நயம்வந்தோதவல் லார்தனம நண்ணினால்
நியமந் தானினை வார்க்கினி யானெற்றி
நயம நாமம் நமச்சிவாயவே.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் மியம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு ரென்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே.

மந்த ரம்மன் பாவங்கள் மேவிய
பந்த னையார் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செலவமு மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே

நரக மேழ்புக நாடின ராயினும்
உரைசெய் வாயின ராயி னுருத்திரர்
விரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத நாமம் நமச்சி வாயவே.

இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கர னூன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவ னுய்வகை
நலங்கொ ணாமம் நமச்சி வாயவே.

போதன் போதன கண்ணனு மண்ணல்தன்
பாதந் தான்முடி நேடிய பண்பராய்
யாதுங் காண்பரி தாகி யலந்தவர்
ஓது நாமம் நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கஞ்சி மண்டையர் கையினுண் கையர்கள்
வெஞ்சிசொன் மிண்டர் விரவல லென்பரால்
விஞ்சை யண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சிவாயவே.

நந்தி நாம நமச்சிவா யவெனும்
சந்தை யாற்றிமிழ் ஞானசம் பந்தன்சொல்
சிந்தை யாண்மகிழ்ந் தேத்தவல் லாரொம்
பந்த பாச மறுக்கவல் லார்களே.

திருச்சிற்றம்பலம்

பண் :- பஞ்சுரம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமேமனம் பாலித்தேன்
பெற்றலும் பிறந் தேனினிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்துஞ்சீர்க்கரை
யூரிற்பாண்டிக் கொடுமுடி
நற்றவாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.

இட்டனும்மடி ஏத்துவாரிகழ்ந்
திட்டநாள் மறந் திட்டநாள்
கொட்டநாளிவை யென் றலால் கரு
தேன்கிளர் புனற் காவிரி
வட்டவாசிகை கொண்டடி தொழு
தேத்து பாண்டிக் கொடுமுடி
நட்டவாவுனை நான்மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சிவாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவுநாளுணர் வழியும் நாளுயிர்
போகுநாளுயர் பாடைமேல்
காவுநாளிவை யென்றால் கரு
தேன் கிளிர் புனற் கவிரிப்
பாவுதண்புனல் வந்திழிபரஞ்
சோதிகாண்டிக் கொடுமுடி
நாவலாவுனை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நம்ச்சி வாயவே.

எல்லையில் புக ழும்பி ரானெந்தை
தம்பிரா ரென்பொன் மாமணி
கல்லை யுந்தி வளம்பொ ழிந்திழி
காவி ரியதன் வாய்க்கரை
நல்ல வர்தொழு தேத்துஞ் சீர்க்கரை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்லவா லாவுணை நான் மறக்கினஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.

அஞ்சி னார்க்கர ணாதி என்றடி
யேனும் நான்மிக அஞ்சி னேன்
அஞ்ச லென்றடித் தொண்ட னேற்கருள்
நல்கி னாய்க்கழி கின்ற தென்
பஞ்சின் மெல்லடிப்பாவைமார் குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்ச ணிகண்ட நான்ம றக்கினினும்
சொல்லுநா நமச்சி வாயவே.

ஏடு வானிளந் திங்கள் சூடினை
என்பின் கொல்புலித் தோலின் மேல்
ஆடு பாம்பத ரைக்க சைத்த
அழகனே அந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்தி ழிபரஞ்
சோதி பாண்டிக் கொடுமுடி
சேட னேயுணை நான் மறக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பி நின்மலர்ப் பாதமே நினைந்
தேன்வி னைகளும் விண்டன
நெருங்கி வண்பொழில் சூழ்ந்தெ ழில்பெற
நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலை கோதை மார்குடைந்
தாடு பாண்டிக் கொடுமுடி
விரும்ப னேயுனை நான்ம றக்கினும்
சொல்லுநா நமச்சி வாயவே.

செம்பொ னேர்சடையாய்தி ரிபுரம்
தீயெழச்சிலை கோலினாய்
வம்பு லாங்குழ லாளைப் பாகம்
அமர்ந்து காவிர்க் கோட்டிடைக்
கொம்பின் மேற்குயில் கூவ மாமயில்
ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்பனே யுனைநான்ம றக்கினும்
சொல்லுநா நமச்சி வாயவே.

சாரணன் தந்தை எம்பிரானெந்தை
தம்பி ரானென்பொன் மாமணியென்று
பேரே ணாயிர கோடி தேவர்
பிதற்றி நின்று பிரிகிலார்
நாரணன் பிர மன்தொழுங் கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடிக்
காரணாவுனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.

கோணிய பிறை சூடி யைக்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடிப்
பேணி யபெருமானைப் பிஞ்ஞகப்
பித்தனைப் பிறப் பில்லியைப்
பாணு லாவரி வண்டறை கொன்றைத்
தாரனைப்படப் பாம்பரை
நாண னைத்தொண்டஊரான் சொல்லிவை
சொல்லுவார்க் கில்லை துன்பமே.

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சக்தி வழிபாடு

மங்கள ரூபினி மதியணி சூலினி
மன்மத பாணியளே
சங்கடம் நிங்கிட சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே
கங்கண பாணியன் கனிமுகங் கண்ட நல்
கற்பகக் காமினியே
ஜெய ஜெய சங்கரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாஷி

கானுறு மலரெனக் கதிர் ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்
தானுறு தவ ஒளி காரொளி மதிஒளி
தாங்கியே வீசிடுவாய்
மானுறு விழியாள் மாதவ மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாஷி

சங்கரி சௌவுந்தரி சதுர் முகர் போற்றிட
கபையினில் வந்தவளே
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்தட வந்தவளே
எங்குலம் தழைத்திட எழில் வடிவுடனே
எழுந்த நற்த் துர்க்கையளே
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாஷி

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்
கணகண கங்கள கதிர் ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணபண பம்பண பறை ஒலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாஷி

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்ச நல்பாணியளே
கொஞ்சிடும் குமரனைக் குணமிகு வேழனைக்
கொடுத்த நல் குமரியளே
சங்கடம் திர்த்திடச் சமரது செய்த நற்
சக்தியெனும் மாயே
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாஷி

எண்ணிய படி நீ அருளிட வருவாய்
எங்குல தேவியளே
பண்ணிய செயலின் பலனது நலமாய்
பல்கிட அருளிடுவாய்
கண்ணொளி அதனால் கருணையே காட்டி
கவலைகள் தீர்ப்பவளே
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாஷி

இடர்தரு தொல்லை இனிமேல் லில்லை
யென்று நீ சொல்லிடுவாய்
சுடர் தரு அமுதே சுருதிகள் கூறி
சுகமது தந்திடுவாய்
படரடதரு இருளில் பருதியாய் வந்து
பளவினை யோட்டிடுவாய்
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய ஜெய பால சாமுண்டேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீபரமேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெய ஜெய ஸ்ரீதேவி
ஜெய ஜெய சங்கரி கௌரி கிருபாகரி
துக்க நிவாரணி காமாஷி

## தேவியின் திருநாம அர்ச்சனை (108)

அம்மணீ! ஜக தம்பிகே! கரு
ணாகரீ! பரமேஸ்வரி!
கண்மணீ! ஜெக கௌரி, கங்கரி
கார்த்திகே! திரி நேர்திரி
தம்மையீ! உப சாந்தினி! சிவ
சாம்பவி ஏகாம்பரீ
சிம்மையீ! சுபசீலி, மாலினி
தேவி கௌந்தரி, ஓம் நமோ!

பத்ர காளி, துர்க்கா, பவானி
பராசக்தி! பரிபாலினி!
சித்சொரூபினி, சிம்ம வாகினி,
திவ்ய ராஜரா ஜேஸ்வரி
வித்வ பூவுணி, மீன் லோசனி
வீரமர்த்தனி விமலினி
சத்ய வாசினி நித்ய கன்னி
தயாபரீ நம, ஓம் சமோ!

குண்டலீ சந்த்ர மண்டலீஇளங்
கோமாளீ! இன்ப ஸ்யாமாரீ!
சண்டிகா, சா முண்டி, பைரவி
சாவித் ஜெய சாயத்திரி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டர் நாயகி, ஆபத் பாந்தவி
அமுத ஞான யோதரீ!
தொண்டர் சாதகி, தூய வானதி
சோம சேகரி, ஓம் நமோ!

சுத்த சக்தி சுடர்க்கொடீ! திவ்ய
சுந்தரீ, ஸ்ரீப ரந்தரீ
வித்தகீ! தெய்வ நர்தகீ! ஜய
விஜயி, பாபவி நாசினி
சித்த ரஞ்சினி, தெய்வகுஞ்சரி
தேவதா, உமா பார்வதீ!
நித்ய வாணி நிரஞ்சினி! மலை
நீலி சங்கரி ஓம் நமோ

சந்த்ர மௌளி சரஸ்வதீ! திவ்ய
சாரதா! ஜயபார தீ
சுந்தராங்கி! கரனு தாவிஸ்வ
சோபிதா சம்ப்ர பாவதீ
மந்திர ரூபினி, மாபகவதி
மஹிஷாசுர மர்த்தனீ
தந்த்ர சாதனி செஞ்சடாதரி
சர்வதாரகி ஓம் நமோ!

அஷ்டரட்சுமி, அம்யஹஸ்தனி
அமலினீ, செங்கமலினி
நிஷ்டையோகினி, நிமலவாகினி
நிஷ்க ளங்கசந் யாசினி
துஷ்ட நிக்ரஹீ! தூய வைஷ்னவி.
ஜோதி வேணி, சுமங்கலி!
சிஷ்ட ரட்சகி, ஹீவ ராகினி
சீதளீ! நம ஓம் நமோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூரணி! ஞானபூசணி! வேத
போதினீ! தர்ம சாதனீ
ஆரணீ! நவசீரணீ! உல
காண்டவீ! எக்ர தாண்டவீ!
காரணி சிவகாமினி ஜீவ
காருணீ ஜகன் மோகினி!
நாரணீ! பவ தாரணீ! புவி
நாயகீ நம் ஓம் நமோ!

## தேவி துணை

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்
ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்

சுந்தர வதனி சுகுண மனோகரி
மந்த காச முக மதிசதனி
சந்தண குங்குமம் அலங்காரமுடனே
தந்திடுவாய் உந்தன் தரிசனமே (ஓம்சக்தி)

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாய் உன்புகழ் பாடிடவே (ஓம்சக்தி)

தங்கச் சிலம்பு சல சர வென்றிட
தாண்டவ மாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்குமானந்த முடன் புவி மேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம்சக்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிய
விரும்பிச் சரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்தமான ஜோதி ஸ்வரூபமு
இராச ராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம்சக்தி)

## தேவி துணை

அபயம் அபயம் அம்மா - அம்மா
அபயம் அபயம் அம்மா
என்னை யாண்டு கொண்டருள்வாய்தாயேலலிதாம்பிகை
அபணம் அபணம் அம்மா - அம்மா
அபயம் அபயம் அம்மா

மங்கள ரூபி மகேஸ்லரித் தாயே
சங்கரி திரிபுர சுந்தரி நீயே
கபாலியின் பிர்ய தாட்சாயணியே
கந்தனுடனே வந்தருள் தா - தா (அபயம்...)

மரம் செடி கொடிகள் மானிடர் தேவர்கள்
மிருகங்களிலும் உயிர்நீ அம்மா
உரம மிகுந்த கொடும் அசுரரை அழித்த
ஒய்யாரி கெப்பீரி தசாபதாரி (அபயம்...)

ஆறுமுகமுடைய என்னுயிர் நாதற்கு
அன்பமுதளித்து மடியிலிருத்தி
தேறுதல் உரைக்க கேசரி யேறி
ஜெக சோதியுடன் ஓடிநீ வா வா (அபயம்...)

ஆனந்தமான மகேஸ்வரித் தாயே
அழகியகரிமுகன் அயன் அரன் ஹரியுடன்
ஞான முனிவர்களும் கான சிரேஸ்டர்களும்
ஜெய ஜெய ஜெயவென கோசம் செய்திடவா
(அபயம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடரில் சூடு போலவும் மலரில் மணம் போலவும் அண்ட சராசரங்கள் சிவ கோடிகளுக்கு சர்வ சக்தியையும் சர்வ சித்தியையும் நல்கின்ற தாயே! உனதருள் பாதமலர்களை பாடிப் பணிந்திடும் பாலராகிய எங்களைச் சகல இடையூறுகளிலிருந்தும் சத்துரு உபாதைகளிலிருந்தும் நோய் பிணி பீடைகளிலிருந்தும் கிரக உபாதைகளிலிருந்தும் அவமிருத்துக்களிலிருந்தும் எங்களைக் காப்பாற்றி இம்மைக்கு வேண்டிய செல்வங்களையும் மறுமைக்கு வேண்டிய செல்வங்களையும் தந்தருள்வாய்! ஓம் ஆதி மகா மகேஸ்வரித்தாயே போற்றி! போற்றி! போற்றி!

## கணபதி வணக்கம்

ஓம் கணபதி ஓம் கணபதி ஓம் கணபதி ஓம்
ஓம் கணபதி ஓம் கணபதி ஓம் கணபதி ஓம்
அத்தி முகத்துடையாய் ஓம் கணபதி ஓம்
ஆதி அந்த சோதியும் நீ ஓம் கணபதி ஓம்
இன்ப மயமானவனே ஓம் கணபதி ஓம்
ஈசனுமை பாலகனே ஓம் கணபதி ஓம்
உத்தண்ட மெய்க் குருவே ஓம் கணபதி ஓம்
ஊருலகம் நிறைபவனே ஓம் கணபதி ஓம்
எண்ணுவார்கள் எண்ணமெல்லாம் ஓம் கணபதி ஓம்
ஏற்றம் பெற நின்றருள்வாய் ஓம் கணபதி ஓம்
ஐயமெல்லாம் தீர்தவனே ஓம் கணபதி ஓம்
ஒற்றை மருப்புடையாய் ஓம் கணபதி ஓம்
ஓதும் வேத நாயகனே ஓம் கணபதி ஓம்
ஔடதமாய் பிணிமாய்ப்பாய் ஓம் கணபதி ஓம்
கருணை மிகு கற்பகமே ஓம் கணபதி ஓம்
காத்தருள் தந்தருள்வாய் ஓம் கணபதி ஓம்
கங்காதரன் மகனே ஓம் கணபதி ஓம்
சந்தம் பொங்கு கவிக்கழகா ஓம் கணபதி ஓம்
சாந்தி தரும் தவக்கொழுந்தே ஓம் கணபதி ஓம்
இடம்பம் கடநடதொளிர்வாய் ஓம் கணபதி ஓம்
கணங்கள் வணங்குகின்ற ஓம் கணபதி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னிகரில்லா தலைவா ஓம் கணபதி ஓம்
நலங்கள் பல வழங்குகின்ற ஓம் கணபதி ஓம்
பஞ்சக் கரத்தரசே ஓம் கணபதி ஓம்
பாஷ அங்குசுர தலனே ஓம் கணபதி ஓம்
மந்திரத்தின் உள்பொருளே ஓம் கணபதி ஓம்
யாதும் ஆகி நின்றவனே ஓம் கணபதி ஓம்
ரணக்கழங்கள் நீக்கிடுவாய் ஓம் கணபதி ஓம்
இலங்கிடுநாதா அருளொளியே ஓம் கணபதி ஓம்
அழகா ஆரணா ஓம் கணபதி ஓம்
இளந்தமிழின் நாதனே ஓம் கணபதி ஓம்
அறமது மிளிர்ந்திடுவே ஓம் கணபதி ஓம்
ஆற்றல்த் திறன் தந்திடுவாய் ஓம் கணபதி ஓம்
ஞானவீர நாயகனே ஓம் கணபதி ஓம்
நன்னெறியே நல்கிடுவாய் ஓம் கணபதி ஓம்

அருள்வாய் ஐங்கரத்தரசே போற்றி
ஆரணத்தனே அருள்வாய் போற்றி
இகமும் பரமும் அருள்வாய் போற்றி
ஈகை நல்கும் இனியாய் போற்றி
உவமையில்லா ஒருவா போற்றி
ஊர்மனைசந்தி உகந்தாய் போற்றி
எண்ணும் அடியார் பண்ணே போற்றி
ஏர்பெறு ஞானம் அருள்வாய் போற்றி
ஐயம் அறுக்கும் ஐயா போற்றி
ஒன்டொடி பங்கினன் அருளே போற்றி
ஓதும் வேதம் பொருளே போற்றி
ஔவியம் இல்லாதவளே போற்றி போற்றி
கருதும் அடியார்க் கருள்வாய் போற்றி
காவிரி நல்கிய கழலே போற்றி
ஙப்போர் மழுவொன்றேந்தி போற்றி
சஞ்சலம் நீக்கம் குஞ்சரா போற்றி
சான்றோர் ஏத்தும் கன்றோய் போற்றி
ஞானியர் உள்ளத் தெளிவே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி என் வினை களைவாய் போற்றி
கண்டர் தந்தருள்வாய் கயமுக போற்றி
எண்டர் திசையும் நிறைவாய் போற்றி
கண்ணோர் மூன்றுடைக் கணபதி போற்றி
தன்னிகர் இல்லாத் தலைவா போற்றி
தாரணி அன்பர்க்கரசே போற்றி
நண்ணினர்க் கினிய நாதா போற்றி
நன்னெறி வித்தையும் ஆனாய் போற்றி
பஞ்சக் கரத்துப் பரனே போற்றி
பாஷாங்குஷமுடைய காவலா போற்றி
மண்முடி சுமந்தார் மகனே போற்றி
மாழாப் பிணி முதல் மாய்ப்பாய் போற்றி
யானை முகத்துடையரனே போற்றி
ரணமாம் முத்திடை மீட்பாய் போற்றி
லங்கிடு ஒளியின் பிரபை போற்றி
அழகா ஆரணா வாரணா போற்றி
இளகிய மனதில் நிறைவாய் போற்றி
அறப்போர் புரிபவர்க் கருள்வாய் போற்றி
இறப்பும் பிறப்பும் அறுப்பாய் போற்றி
நன்னெறி நல்கும் நாயகா போற்றி
போற்றி போற்றி புண்ணிய போற்றி
பண்ணிய தவத்தின் பயனே போற்றி
எண்ணிய முடிக்க அருள்வாய் போற்றி

மங்கள மருளும் ஐங்கர முதலே
மங்கல நாத வளிபுக ளூறவே
பொங்கிடும் அருளொரு அலங்கிடு மரசே
பங்கயன் தருவிதி மங்கிட அருளே (மங்கள...)

கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கயமுக ஐங்கர கணபதி ஓம்
குணபதி யாம்சிவ கணபதி ஓம்
குண்டல மண்டல கணபதி ஓம் (கணபதி ஓம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூஷிக வாகன கணபதி ஓம்
மூலப் பிரணவ கணபதி ஓம்
மாசறு தேசிக கணபதி ஓம்
மங்கள மோகன கணபதி ஓம் (கணபதிஓம்)

விக்ன விநாயகா கணபதி ஓம்
விகை சிகை நகைமுக கணபதி ஓம்
உக்கிர தபோல கணபதி ஓம்
ஓர்த்துவ நர்த்ன கணபதி ஓம் (கணபதிஓம்)

பார்பதி பால கணபதி ஓம்
பரசிவ ஞான கணபதி ஓம்
பூர்ண விநாயக கணபதி ஓம்
புவண புரந்தர கணபதி ஓம் (கணபதிஓம்)

சுத்த சதாசிவ கணபதி ஓம்
சுந்தர குஞ்சர கணபதி ஓம்
நித்திய தத்துவ கணபதி ஓம்
நின்மல சின்மய கணபதி ஓம் (கணபதிஓம்)

ஓமெனும் பொருளே கணபதி ஓம்
உத்தமி மகனே கணபதி ஓம்
வாமணன் மருகா கணபதி ஓம்
வந்தருள் புரிவாய் கணபதி ஓம்
சிவனவன் புதல்வா கணபதி ஓம்
தேர்க்கால் முறிந்தாய் கணபதி ஓம்
தவனெறி காட்டும் கணபதி ஓம்
தமியெனைக் காப்பாய் கணபதி ஓம்
முத்தமிழ் முதல்வா கணபதி ஓம்
மூஷிக வாகனா கணபதி ஓம்
சித்திகள் அருளும் கணபதி ஓம்
சேயெனைக் காப்பாய் கணபதி ஓம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் என்னும் பிரணவ ரூப நாயகா
உமையவளின் பாலனே விநாயகா ஓம் என்னும்...

தேவர் மூவர் போற்றும் தேவ நாயகா
தேவாதி தேவனே விநாயகா ஓம் என்னும்...

வல்வினைகள் தீர்க்கும் விக்ன விநாயகா
வேண்டும் வரம் தந்திடும் விநாயகா
மௌனத்தின் முழுப்பொருளே விநாயகா
முக்கண்ணன் மைந்தனே விநாயகா ஓம் என்னும்...

## முருக வழிபாடு

ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகா ஓம்
ஓம் முருகா ஓம் முருகா ஓம் முருகா ஓம்
முருகா முருகா முருகா முருகா
முருகா முருகா திருமால் முருகா
திருமால் முருகா வடிவேல் அழகே
வடிவேல் அழகா வண்ணமயில் வாகா
வண்ணமயில் வாகா வந்தெனை ஆள்வாய்
வந்தெனை யாள்வாய் வடிவேல் முருகா
வடிவேல் முருகா வேல் வேல் முருகா
வேல் வேல் முருகா வெற்றிவேல் முருகா
வெற்றிவேல் முருகா ஞானவேல் முருகா
ஞானவேல் முருகா சக்தி வேல் முருகா
சக்திவேல் முருகா ஜெய ஜெய முருகா
ஜெய ஜெய முருகா அரஹர முருகா
சிவ சிவ முருகா ஜெய சிவ முருகா

அன்பருக் கன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் வா வா முருகா
இன்பமய சோதியே நீ வா வா முருகா
ஈசனருள் குருமணியே வா வா முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகநாதன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா
எட்டுக் குடி வேலவா நீ வா வா முருகா
ஏறுமயில் வாகனனே வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே வா வா முருகா
அன்பருக் கன்பனே நீ வாவா முருகா
ஆறுபடை வீடுடையாய் வா வா முருகா
இன்பமய சோதியே நீ வா வா முருகா
ஈசனருள் குருமணியே வா வா முருகா
உலகநாதன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா
எட்டுக் குடி வேலவா நீ வா வா முருகா
ஏறுமயில் வாகனனே வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே வா வா முருகா
ஒய்யாரி வள்ளி வேலா வா வா முருகா
ஓங்கார தத்துவனே வா வா முருகா
ஔவைக் குபதேசித்தவா வா வா முருகா
அகில லோக நாயகனே வா வா முருகா
ஓடி வா நீ ஓடி வா நீ வா வா முருகா
ஆடி வா நீ ஆடி வா நீ வா வா முருகா
பாடி ஆட வரந்தரவே வா வா முருகா

முருகா முருகா முருகா முருகா
முருகா முருகா முருகா முருகா
முருகா முருகா முருகா முருகா
முருகா முருகா முருகா முருகா

கதி நீ மதி நீ கதிர்வேல் முருகா
துதி செய் அடியார் துணை நீ அரசே
விதி செய் வினையும் விலகப் புரிவாய்
புதி தாகிய வாழ் வருள் புங்கவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தி கனலே சமர் செய் பகையைக்
குத்திக் குழுறும் கொதிவேல் கரனே
தொத்தித் தொடரும் துயரம் களைவாய்
பக்தர்கருளும் பரமன் மகனே (முருகா)

அருளார்க் முகமும் அடியார்க் காயம்
தற்பொற் கரமும் கணலார் விழியும்
கருணை பொழியக் கனிவாய் நகையும்
திரு மார்பழகும் திகழும் முருகா (முருகா)

அன்பர்க் கெழிதாய் தருவாய் அபயம்
நம்பன் உமை நாதன் அருட் கனலே
உன் பாதம் உள்ளத்தில் ஊன்றிடவே
என்பால் குருவாய் வருவாய் இறைவா (முருகா)

இரவும் பகலும் இதயத் தணையே
பரவும் அறிவும் பணியுந் தருவாய்
புரியும் தொழில் யாவையும் பூசனையாய்
புரியும் படிசெய் பரியூரணனே (முருகா

வள்ளி மோஹனா புள்ளி மயில் வாகனா
கதிர்காமக் கந்தனே சுந்தர வதனா
குமர குரு ஈரமுக வடி வேலவா
முருகா ஹரி முருகா சிவசக்தி பாலகா

சரவணனே பவகுகனே ஓம் முருகா
இருவினை கெட வரம் அருள் தரும் வேல் முருகா
ஆறுமுகா சிவன்முக ஓம் முருகா
முருகா ஹரி முருகா சிவ சக்தி பாலகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஷ்ணு வழிபாடு - பிரார்த்தித்தல் (வேண்டுதல்)

ஹரி ஓம் நமோ நாராயணாய நமோ நமஹ
ஹரி ஓம் நமோ நாராயணாய நமோ நமஹ
ஹரி ஓம் நமோ நாராயணாய நமோ நமஹ
ஹரி ஓம் சிவ சூரிய நாராயணாய நமோநமஹ
ஹரி ஓம் லட்சுமி நாராயணாய நமோ நமஹ
ஹரி ஓம் நமோ குருநாராயணாய நமோ நமஹ
ஹரி ஓம் நமோ பகவதே வாசுதேவாய நமோநமஹ
ஹரி ஓம் நமோ பகவதே வாசுதேவாய நமோநமஹ
ஹரி ஓம் நமோ கோதண்டாய நமோநமஹ
ஹரி ஓம் நமோ கோவிந்தாய நமோநமஹ

அகில உலகங்களையும் ஆத்ம கோடிகளையும் காத்து ரட்சிக்கின்ற கரணைக் கடலே கார்முகில் வண்ணா! உமதருள் பாதார விந்தங்களைப் பாடிப் பணிந்திடும் பாலர்களாகிய எங்களை நோய் பிணி பீடைகளில் இருந்தும், பஞ்சம் பசிகளிலிருந்தும், கொடியோரினால் வரும் கொடும் துன்பங்களையோ இராச கலங்களையோ அராச உவத்திரங்களையோ இராச சூட்சிகளையோ இராச தந்திரத்தினால் வருகின்ற பேரழிவுகளையோ வந்து நாடாத வண்ணம் காத்தருள் செய்து எங்களிடையே நல்லறிவும் நல்வாழ்வும் சாந்தியும் சமாதானமும் சகோதரத்துவமும் என்றும் எங்கும் எவரிடமும் திகழ அருள் புரிவாய் ஹரிஓம் ஆதிநமோ நாராயணாய போற்றி, ஹரி ஓம் ஆதிநாராயணாய சரணம், ஹரி ஓம் ஆதி நாராயணாய அபயம்.

ஹரிஓம் நமோ நபரபயணாய சரணம்
ஹரிஓம் நமோ நபரபயணாய அபயம் அபயம் அபயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடல்

ஓம் நமோ நாரயணாய ஓம் நமோ நாரயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
நாராயணகிரி நாராயணகிரி நாராயணகிரி நாராயணா
நாராயணகிரி நாராயணகிரி நாராயணகிரி நாராயணா
நாராயணா ஓம் நாராயணா நாராயணகிரி நாராயணா

வைகுந்த வாசா நாராயணா
கோபிந்த நாதா நாராயணா
முகுந்த முநாரி நாராயணா
பொங்கும் அருள் புரி நாராயணா
காகுந்த நாதா நாராயணா
கருணாகர ஹரி நாராயணா
தகுந்த காவலா நாராயணா
தவத்தோர்க் கரசே நாராயணா!

## சிவ வணக்கம்

சம்போசங்கர நீலகண்ட ஓம் சாம்பதாசிவ நீலகண்ட
சம்போசங்கர நீலகண்ட ஓம் சாம்பசதாசிவ நீலகண்ட
சம்போசங்கர நீலகண்ட ஓம் சாம்பசதாசிவ நீலகண்ட
சம்போசங்கர நீலகண்ட ஓம் சாம்பசதாசிவ நீலகண்ட
சம்போசங்கர நீலகண்ட ஓம் சாம்பசதாசிவ நீலகண்ட
சம்போசங்கர நீலகண்ட ஓம் சாம்பசதாசிவ நீலகண்ட
நீலகண்டா ஓம் நீலகண்டா நீலகண்டா திரு நீலகண்டா
நீலகண்டா ஓம் நீலகண்டா நீலகண்டா திரு நீலகண்டா
சம்போசங்கர நீலகண்டா ஓம் சாம்பசதாசிவ நீலகண்ட
சாம்பசதாசிவ சாம்பசதாசிவ சாம்பசதாசிவ நீலகண்ட
சம்போசங்கர சம்போசங்கர சம்போசங்கர நிலகண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துக்கள்

ஓம் ஐங்கரப் பெருமான் திருவடித் தாமரைகள் நீடூழி வாழ்க
ஓம் சர்க்குரு நாதன் திருவடித் தாமரைகள் நீடூழி வாழ்க
ஓம் பொன்னம்பலம் பெருமான் திருவடித் தாமரைகள் நீடூழி வாழ்க
ஓம் திரு நீலகண்டப் பெருமான் திருவடித் தாமரைகள் நீடூழி வாழ்க
ஓம் அமிர்தபாஷணி சமேத சந்திரசேகலப் பெருமான் திருவடித் தாமரைகள் நீடூழி வாழ்க

ஓம் நாராயணப் பெருமான் திருவடித்தாமரைகள் நீடூழிவாழ்க
ஓம் ஆறுமுகப்பெருமான் திருவடித்தாமரைகள் நீடூழி வாழ்க
ஓம் அன்னை மகா மகேஸ்வரித்தாயின் திருவடித்தாமரைகள் நீடூழி வாழ்க
ஓம் உலக மகாசக்தி தாயின் திருவடித் தாமரைகள் நீடூழிவாழ்க
அடியார்கள் அல்லல் நீங்கி ஆனந்தம் பெற்று நிறைந்த வாழ்வு வாழ்க

## புராணம்

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழ
வான்மை தரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்று விழி நால்வாய்
ஆனை முகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்

தந்தி முகத்தனை சங்கரன் மைந்தனை
தொத்தி வயிற்றனை தோடணி செவியனை
இந்திரனுக் கருள்ஈந்த இறைவனை
மந்திர ரூபனை யாம் மறவோமே

துங்கமத கும்பவுயர் தும்பிமுகன் தம்பி - சீர்
தங்கு நெகுழும் சிறு சதங்கைகளட புலம்பவே
மங்கையுமை கண்குளிர வந்துலவு கின்றதாள்
அங்கை மலர் கொண்டுமிகு அன்புடன் இறைஞ்சுவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக சிதம்பர அணங்குமுமை அணங்கினாள்
நாடக ஆனந்தசுக நன்கு பனை பங்கினாள்
ஏடக மணம் பொருவ எங்கனும் இசைந்துளாள்
பாடகமிலங்கு சிறு பங்கய மிறைஞ்சுவாம்
உலகமெல்லாம் உணர்ந்து ஓதுதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் விலம்படி வாழ்த்தி வணங்குவாம்

இதந்தரு மதந்தையொடு இசைந்துயிர் உடம்புபோல்
விதம்படு உலகங்களில் விரிந்தொழிர் விழங்குவார்
மதங்கமொடு துந்துபி வளங் கெழ முழங்னவே
சிதம்பர நடம்பயில் செளுங்கழல் இறைஞ்சுவாம்

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் இசைவாகி
ஒண்கடலில் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத்தே பருகிப் பலகாலும்
எந்தனுயிர்க் காதரவுற்றருள் வாயே
தம்பிதகக்காக வளத்தனைவோ னே
தந்தைவலத் தாலருள் சைக்கனியோனே
எந்தை நிலைக்கான நிலைப் பொருளோனே
ஐந்து கரத்தானை முகப் பெருமானே

பாதிமதி நதி போது மணிசடை
நாதன ருளிய - குமரேசா
பாகு கனி மொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காகமுறவருள்
மானரி திரு மருகோனே
காலனெனை யணுகாம லுனதிரு
காலில் வழிபட அருள்வாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழவலம் வரும் இளையோனே
ஆதியயனொடு தேவர் சுரரு
லகாளும் வகையுறு சிறைமீளா
சூதமிகவளர் சோலைமருவு
சுவாமி மலைதனில் உறைவோனே
சூரனுடலற வாரிசுவறிட
வேலைவிடவல பெருமானே.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனைவ தைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மான பொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெருமானே.

## அபிராமி துதி

கலையாத கல்வியும் துறையாத வயதுமோர்
கபடு வராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத விளமையும்
கழுபிணி யிலாத உடலும்
சலியாத மனமுமன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமம்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வராத கொடையும்

தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்புமுத விப்பரிய
தொண்ட ரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதி கடவூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள் வாணி அபிராமியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனம்தரும் கல்விதரும் ஒரு நாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவுந்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே

ஆத்தாளே எங்கள் அபிராமி வல்லியை அண்ட மெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவி அடங்கக்
காத்தாளை ஐங்கனை பாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளைமுக்கண்ணியைத்தொழுவார்க்கொருதிங்கில்லையே

## பதினாறு பேறு

மறைக ணிந்தனை சைவநின் தனை பொறா மனமும்
தறுக் கைம்புலன் களுக்கேவல் செய்யுறாச் சதுரும்
பிறவி தீதெனாப் பேதையர் தம்மொடு பிணக்கும்
உறுதி நல்லறஞ் செய்பவர் தங்களோ டுறவும்
யாது நல்லன்பர் கேட்கினு முதவுறு மியல்பும்
மாத வத்தினோ ரொறுப்பினும் வணங்கிடு மகிழ்வும்
ஓது நல்லுப தே மெய் யுறுதியு மன்பர்
தீது செய்யஜனுஞ் சிவச் செய லெனக் கொளுத் தெளிவும்
மனமும் வாக்கும் நின் னன்பர்பா லொருப்படு செயலும்
கனவிலும் உன தன்பருக் கடிமையாங் கருத்தும்
நினைவில் வேறொரு கடவுளை வழிபடா நிலையும்
புனித நின்புகழ் நாடொறு மரைந்திடும் பொலிவும்

தீமை யாம்புறச் சமயங்க ளொழித்திடுந் திறனும்
வாய்மை யாகவே பிறர் பொருள் விழைவுறா விளனும்
ஏழு ரும்பர தாரநச் சிடாதனன் னோன்பும்
தூய்மை நெஞ்சினையா னெனதெனுஞ் செருக்குறாத் துறவும்

துறக்குமீ துறையினு நககிற் றோய்கினும்
இறக்கினும் பிறக்கினு மின்பந் துய்க்கினும்
பிறைக் கொழுந் தணிசடைப் பெரும் விவ்வரம்
மறுத்திடா தெனக்கு நீ வழங்கல் வேண்துமால்
துதி வாணி வீரம் விசயம் சந்தானம் துணிவு தனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதி தானியம் சௌபாக்கியம் போகம் அறிவழகு
புதிதாம் பெருமை யறங்குல நோயகல் பூண் வயது
பதினாறு பேறு தருவாய் மதுரைப் பராபரனே.

- திருவையாற்றுப் புராணம்

ஆசை ஆறாய் பாசம் விடாய் ஆனசிவ பூசை பண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய் - சீசீ
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே உனக் கென்னவாய் - குரு ஞான சம்பந்தர்

## வாழ்த்து

கதிவாழ்க வேத நல் ஆகமம் வாழ்க நற்கண்மணி உன்
பதிவாழ்க சைவம் திருநீறும் கண்டியும் வாழ்க அருட்
குருவாகும் நின்றன் திருக்கூட்டம் வாழ்க நற்கோ நிரைகள்
தெருவாழ் தருமைத் திரு ஞான சம்பந்த தேசிகனே.

## வேண்டுதல்

ஓம் உலகமெல்லாம் படைத்துக் காத்து கருணை மழை பொழிகின்ற கர்த்தாவதகிய பரம்பொருளே உமதருட் பாதார விந்தங்களை பாடிப் பணிந்திடும் பாலராகிய யாங்கள் அறியாமையாலோ சந்தர்ப்ப வசத்தாலேயோ பாவங்கள் செய்திருப்பின் அவை யாவையும் மன்னித்து எங்களை ஆட் கொண்டு அந்நியரால் வரும் அழிவுகளிலிருந்து காத்து துயர்களைந்து தூயவர்களாக்கி நோயற்ற வாழ்வையும் குறைவற்ற செல்வத்தையும் நிறைவுற்ற கல்வி அறிவுகளையும் சிறப்புற்ற தொழில் வளங்களையும் நலம் மிகுந்த நல் வாழ்வுதனையும் நல்லார் இணக்கத்தையும் இறைவா உமை என்றும் மறவாத நினைவன்பையும் என்றென்றும் தந்தருள்வாய்! ஓம் மகா மகேஸ்வராய போற்றி! ஓம் ஆதி மகா மகேஸ்வரித்தாயே போற்றி! பொங்கும் மங்களம் எங்கும் மிளிர்க! அரன் நாமமே எங்கும் முழங்குக. புண்ணியச் செயலே எங்கும் நிகழுக! திருவருளே எங்கும் பொழிக குருவருள் பெற்றுக் குவலயம் குறைவின்னி நீடூழி வாழ்க....!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org